**மத்துகம பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்துகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மத்துகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. | | |

| | | |
|---|---|---|
| • ஆண்டிற்கான மிகை ரூபா 79,856,740 ஆக இருந்த போதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் விரிவான வருமானமாக ரூபா 79,354,952 காண்பிக்கப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 501,788 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| • மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாதிருந்த மூலதன செலவினப் படிகள் ரூபா 81,778,186 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டில் மிகைக்காக சீராக்கப்படாமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறினால் ஏற்பட்ட வழுவை ஏற்றுக்கொள்வதுடன் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| • ஆண்டின் இருப்பு அதிகரிப்பு பெறுமதி ரூபா 8,142,551 செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலில் குறைத்து காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 676,524 ஆக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்ட ரூபா 676,524 பெறுமதி குறைத்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • ஆண்டின் போது ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் அதிகரிப்பு ரூபா 140,830,573 செயற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சலில் குறைத்து காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 146,693,211 ஆக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| • குறுங்கால செலுத்த வேண்டியவைகளில் ஆண்டின் போது அதிகரிப்பு ரூபா 53,774,228 செயற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்ச்சலில் சேர்த்துக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 40,395,322 ஆக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | பிழையாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சேர்க்கப்பட்ட ரூபா 40,395,322 சரி செய்யப்பட்டு ஆண்டின் குறுங்கால செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு ரூபா 43,190,664 சேர்க்கப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிழை சரிசெய்யப்படல் வேண்டும். |
| • ஏனைய நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் ஆண்டின் போது குறுங்கால கடன் பெறுதலின் குறைவு ரூபா 9,834,512 செயற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப் பாய்ச்சலில் குறைத்து காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 474,842 ஆக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • ஆண்டின் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள் ரூபா 22,383,818 ஆக இருந்த போதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 1,207,229 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா 21,176,589 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.29 இன் பிரகாரம் ஆண்டில் நடைமுறையல்லா முதலீடுகளின் அதிகரிப்பு ரூபா 8,872,374 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | தவறினால் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏற்பட்ட தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.30 இன் பிரகாரம் ஆண்டில் கிடைத்த மூலதன செலவின மானியம் ரூபா 81,276,398 | தவறினால் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏற்பட்ட தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.26 இன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபை கணக்கில் சேமிப்பு வைப்பின் பெறுமதி ரூபா 3,973,639 தொகை காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது நடைமுறையல்லா முதலீடாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 6.4 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களின் அதன் ஆரம்ப இனங்காணலின் போது நிறுவனமொன்று இனங்காணப்பட வேண்டியது அதன் கிரயமாகும். எனினும், 2019 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கோபிவத்த சந்தியில் வெலிப்பன்ன தாய் சேய் பராமரிப்பு சிகிச்சை நிலைய பழைய கட்டிடத்தின் ரூபா 6,852,228 கிரயம் கணக்கீடு செய்யப்படாமல் ரூபா 4,665,000 மதிப்பீட்டு பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் மீள்மதிப்பீட்டு ஒதுக்கமும் ரூபா 2,187,228 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 6.4 இன் பிரகாரம் ஆரம்பமாக இனங்காணப்பட வேண்டிய கட்டிடங்களின் கிரயம் இனங்காணப்படாமல் ரூபா 9,926,429 மதிப்பீட்டுப் பெறுமதி மீள்மதிப்பீட்டு பெறுமதியாக குறிப்பிடப்பட்டிருந்தது. அப்பெறுமானத்தால் | சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீள்மதிப்பீட்டு இலாபம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 சனவரி 01 இல் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 89,334,487 ஆக இருந்த போதும், உரிமை மூலதன மாற்றக்கூற்றில் திரண்ட நிதியக் கணக்கில் ஆரம்ப மீதி ரூபா 74,661,011 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் 2019 ஆண்டில் விரிவான வருமானம் ரூபா 10,305,157 திரண்ட மிகையில் குறைக்கப்பட்டமையால் அந்த அளவினால் உரிமை மூலதனம் குறைவடைந்திருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) திரண்ட நிதியக் கணக்கில் ஆண்டிற்கான மிகை ரூபா 79,856,740 குறிப்பிடப்படாதிருந்ததுடன் அப்பெறுமதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாமல் மூலதன செலவின மானியமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டின் போது உரிமை மூலதன மாற்றத்திற்காக தாக்கமளித்த மூலதன ஒதுக்கம் மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்குகளில் இடம்பெற்ற முரண்கள் மூலதன மாற்றங்கள் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | தவறினால் கைவிடப்பட்டமையால் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வின் போது ஆயுர்வேத மருந்து இருப்பு மெய்மையாய்வு செய்யப்படாதிருந்ததுடன் ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் அறிக்கையின் பிரகாரம் அந்த இருப்பின் பெறுமதி ரூபா 1,039,552 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 இன் பொருள் மெய்மையாய்வின் போது ஆயுர்வேத மருந்து இருப்பு மெய்மையாய்வு கைவிடப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் மெய்மையாய்வின் போது மருந்து இருப்பு மெய்மையாய்விற்கு உட்படுத்தப்படும். | பொருள் மெய்மையாய்வு செய்து இருப்பை சரியாக இனங்காணல் வேண்டும். |
| (ஊ) | ஆண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வின் போது அகற்றுவதற்கு இனங்காணப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் முறையே ரூபா 1,970,990 மற்றும் ரூபா 61,650 தேவையான அங்கீகாரமின்றி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டமையால் அப்பெறுமதியால் அலுவலக மற்றும் தளபாட உபகரண கணக்கு குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் பொருள் மற்றும் உரிய பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றப்படும். | முறையான திட்டத்தில் கணக்குகளில் சீராக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | கோப்பிவத்த சந்தியில் வெலிப்பன்ன தாய்சேய் சிகிச்சை நிலைய பழைய கட்டிடம் உடைத்து அகற்றப்பட்ட போதிலும் ரூபா 1,600,000 ஆன அப்பெறுமதி கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் கணக்கில் சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்கில் பக்க இலக்கம் 37 இல் நிலையான சொத்து பட்டோலையில் உடைத்து அகற்றப்பட்ட கட்டிடத்தின் ரூபா 1,600,000 பெறுமதி உள்ளடக்கப்பட்டுள் ளது. அது சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் அவற்றில் காணப்பட்ட மீதி பெறுமானத்தேய்வு விகிதத்தின் படி ரூபா 7,586,395 குறைக்கப்பட்டமையால் அப்பெறுமானத்தால் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் குறைவடைந்திருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சரியாக மீள்மதிப்பீடு மேற்கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மீள்மதிப்பீடு மற்றும் கணக்கு வைத்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 13,214,153 வேறுபாடு காணப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் சரிசெய்யப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பட்டோலைகள், பேரேட்டுக் கணக்குகள் இன்மையால் கூட்டுமொத்தமாக ரூபா 692,863,579 ஆன 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 79,856,740 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,363,677 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1. வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியின் போது ஒட்டுமொத்த ஆதனவரி நிலுவை ரூபா 7,290,483 ஆக இருந்ததுடன் அதில் 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா | ரூபா 12,041,998 சிட்டையிடல் 2021 மே இல் உள்ளவாறு ரூபா 6,899,928 தொகை அறவிடப்பட்டுள்ளது. சதவீதம் 57.30 ஆகும். நிலைமை சரியானவுடன் | நிலுவை ஆதனவரி வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1,028,431 ஆகவும், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை ரூபா 735,313 ஆகவும் காணப்பட்டது. | உடனடியாக நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,598,756 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 77,500,000 ஆகும். | மாகாண இறைவரி ஆணையாளரின் தாமதத்தால் ரூபா 9,598,756 நீதிமன்றத் தண்டப்பணம் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | நிலுவையை விரைவாக அறவிடல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சகைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புதிதாக தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள திக்பிட்ட முன்பள்ளி பாடசாலை மற்றும் கொஸ்லந்த முன்பள்ளி பாடசாலைகளுக்காக 2020 மார்ச் 10 ஆந் திகதி ரூபா 104,900 செலவினமொன்றை செய்து முன்பள்ளி பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும், முன்பள்ளி பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அந்த முன்பள்ளி பாடசாலைகளுக்காக ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் (மே.மா) 2021 மார்ச் 09 ஆந் திகதிய அங்கீகாரத்தின் படி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு முன் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |